மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 11ம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 311/2017 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. அய்யாவு | வயது | .. 67 |
| த/பெ. | .. நாராயணசாமி | சாதி | .. |

11.08.2021 - வா.சா.1, 2, 4, மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

எவ்வளவு சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 ஏக்கர் மற்றும் 3 ஏக்கர் சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளேன். நான் என்ன சமூதாயத்தை சேர்ந்தவன் என்றால் உப்புறவு செட்டியார் சமுதாயத்தை சேர்ந்தவன். நான் எனது தாவாவில் எனது சமுதாயத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். வழக்கு சொத்துக்கள் எனது தாத்தா சம்பாதித்த சொத்துக்கள். எனது தாத்தா ரங்க செட்டியார் அவர் கிரையம் பெற்றது தான் வழக்கு சொத்து. தாவா சொத்துக்களில் தனித்தனி கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றார். தாவா சொத்தில் முதல் 3 ஏக்கரை கண்ண செட்டியார் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 என்றால் எனக்கு படிக்கத்தெரியாது என்று சாட்சி கூறியுள்ளார். வழக்கறிஞர் படித்துக்காட்டினார். அதில் துரைசாமி ரெட்டியார் என்பவரிடமிருந்து ரங்க செட்டியார் கிரையம் வாங்கியுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆன கிரையப்பத்திரம் 3 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்டது அல்ல என்றாலும் 4 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஐ தவிர

வேறு கிரையப்பத்திரம் எதுவும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 4 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் தான் எனது தாத்தா பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், 3 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட கிரையப்பத்திரம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் 2 சகோதரிகள். 4 ஏக்கர் சொத்தில் எனது பங்கான 1 ஏக்கர் 3 செண்ட் நிலத்தை நான் முனுசாமி என்பவருக்கு ஜனவரி 1992ல் கிரையம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வழக்கு சொத்தை தற்போது யார் யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அவர்கள் பெயரை என்னால் சொல்ல முடியவில்லை. எனக்கு 20 வயது இருக்கும்போது சென்னைக்கு சென்று விட்டேன். அன்று முதல் இன்றுவரை சென்னையில் தான் இருந்து வருகிறேன். நான் எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலத்தை மீட்டுக்கொடுக்கக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யாரிடமிருந்து வழக்கு சொத்தை மீட்டுக்கொடுக்க வேண்டும் என்று எனது தாவாவில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அவர்கள் பெயர்கள் என்ன வென்றால் காசி, மற்ற நபர்கள் பெயர் எனக்குத் தெரியாது. நான் இந்த வழக்கை 10 நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். அந்த 10 நபர்களில் யார் யார் எவ்வளவு சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. அந்த 10 நபர்களுக்கு அந்த சொத்துக்கள் எப்படி உரிமையானது என்ற விவரமும் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்து பஞ்சமி நிலம் என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா 3 ஏக்கர் சொத்து எனது தாய் வழி பட்டனாரான ஒரு பெருமாள் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. எனது தாத்தா ரங்க செட்டியார் கிரையம் வாங்கிய சொத்தாகும். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெருமாளுக்கு வரதன், கண்ணன் என்ற இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். அவர்களது வாரிசுகள் உள்ளார்கள் என்றால் வாரிசு யாரும் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும், 3 ஏக்கர் சொத்து பெருமாள் என்பவருக்குத் தான் சொந்தம் என்றாலும், அவருக்குப்பின் அவரின் வாரிசுகளுக்குத்தான் சொந்தமானது என்றாலும் சரியல்ல. எனது தாத்தா ரங்க செட்டியாருக்கு

நாராயணசாமி, முனுசாமி, கோவிந்தசாமி என்கிற ஊமையன், பலராமன் மற்றும் இரண்டு பெண்கள் என்றால் சரிதான். இவர்களில் பலராமன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரியல்ல. அவர் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். பலராமனின் 2 மனைவிகளும் தற்போது உயிருடன் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. பலராமன் உயிருடன் இருக்கும்போதே அவரது பங்கான 1/4 பாகம் நிலத்தை ஒரு சரோஜா என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர் கொடுத்திருந்தால் நாங்கள் தடுத்திருப்போம். ஊமையனுக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அதில் ஒருவர் இறந்து விட்டார். அவருக்கு வேடியப்பன், முருகன் என 2 மகன்கள் உள்ளனர். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் ஊமையனின் முதல் மனைவிக்கு ஏழுமலை என்ற ஒரு மகன் இருக்கிறான், அதனை நான் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. ஊமையன் என்பவருக்கு ஏழுமலை என்ற ஒரு மகன் இருக்கிறான் என்றால் சரிதான். நான் எனது வழக்கில் ஏழுமலையைப்பற்றி சொல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஊமையனின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து வழக்கில் 4ம் பிரதிவாதியான கன்னியம்மாள் என்பவருக்கு அவரது பங்கான 4ல் ஒரு பாகத்தை 13.1.1999 அன்று கிரையம் கொடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது தாத்தா கிரையம் பெற்ற 4 ஏக்கர் சொத்துக்களை அவரது வாரிசுகள் ஏற்கனவே கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றாலும் அதனால் அச்சொத்திற்காக என்னால் வழக்கிட முடியாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தான 7 ஏக்கரும் எனக்கு மட்டும் தான் சொந்தமானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது வேறு நபர்களுக்கும் சொந்தம் என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு மட்டும் சொந்தமானது என்று கூறிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எனது வழக்கில் எனக்கும் மற்ற நபர்களுக்கும் உரிமை உள்ளது என்றும் அவர்களுக்காகவும் சேர்த்துதான் நான் வழக்கு தாக்கல் செய்வதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனது வழக்கில் நான் சென்னை செல்லும்போது வழக்கு சொத்தை வழக்கின் பிரதிவாதிகளுக்கு வாரத்திற்கு விட்டு சென்றதாக

கூறியிருக்கிறேன் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. அதே போன்று வருடாவருடம்



வாரத்திற்கு விட்டதற்கான குத்தகையை வாங்கி சென்று விடுவேன் என்றும் ' தாவாவில் கூறியிருக்கிறேன் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. நான் வழக்கில் சொத்தை வைத்திருப்பவர்களே வரி கட்ட சொல்லி சொல்லியிருக்கிறேனா என்றால் காசி இடம் மட்டும் அவ்வாறு சொன்னேன். 7ம் பிரதிவாதியான காசி என்பவர் வழக்கு சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர்தான் அனுபவித்து வருகிறார். 1ம் பிரதிவாதி வேலு, 2ம் பிரதிவாதி கிருஷ்ணன், 7ம் பிரதிவாதி காசி ஆகியோர் வழக்கு சொத்தை அனுபவிக்கவில்லை என்றாலும் எனவே அவர்கள் சொத்தின் சுவாதீனத்தை கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் சரியல்ல. அவர்கள் தான் அனுபவத்தில் உள்ளார்கள். 4ம் பிரதிவாதி கன்னியம்மாள் என்பவர் கிரையம் பெற்று சொத்தை அனுபவித்து வருகிறார். அவர் சொத்தை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1, 2 மற்றும் 7 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்றாலும் எனவே அவர்களுக்கு எதிரான வழக்கை அவர்களது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பஞ்சமி நிலம் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் போளூர், பதிவு அலுவலகத்தில் இருந்து ஆவணம் வாங்கி தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் எனது தாத்தா பெயரில் உள்ளது. நான் வழக்கு சொத்தில் உரிமை இல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் 1, 2, 4, மற்றும் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை செலவுத்தொகையுடனும், இழப்பீட்டுத் தொகையுடனும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் உப்புறவு செட்டியார் என்ற சமுதாயத்தை சேர்ந்தவன் என்பதற்கான ஜாதி சான்றிதழை வட்டாட்சியர் இடமிருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எதுவும் நான் சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அந்த காரணத்திற்காகவும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

(Sd)/-D.Ravi,

District Munsif,

Polur.